IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.4

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ஆனந்த குமார் |
| OCCUPATION | - | காவல் உதவி ஆய்வாளர், காட்பாடி |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது காட்பாடி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 29.04.2024 தேதி சத்துவாச்சாரி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது உமா சங்கர் த/பெ.கண்ணாயிரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூல புகாரினைப் பெற்று சத்துவாச்சாரி காவல் நலைய குற்ற எண்.159/2024 இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294 (b) 506(ii), 436, 452, 307, 149, 3 PPDL Act, 4 படி வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்காக வைத்துள்ளேன். நான் பதிவு செய்த அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ-5 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை-</u>

சத்துவாச்சாரி காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு அரை மணி நேரத்திற்குள் வந்துவிடலாம். சத்துவாச்சாரி காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 29.04.2024 இரவு 09.30

மணிக்கு காலத்தாமதமாக புகாரை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரி. புகார் பெறும் முன்பு வரை காவல் நிலையத்திற்கு சம்பவம் குறித்து எவ்விதமான தகவலும் பெறவில்லை என்றால் சரி. அ.சா.1 கொடுத்த புகாரில் புகார் கொடுத்த தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரி. புகாரைப் பதிவு செய்து எனது உயர் அதிகாரியின் பார்வைக்கு காலை 04.00 மணிக்கு வைத்துவிட்டேன். நீதிமன்றத்திற்கு புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் 29.04.2024 காலை 03.00 மணிக்கு வழக்கு பதிவு செய்ததாக சொல்லிவிட்டு புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் அன்று இரவு 09.30 மணிக்கு அனுப்பியது வழக்கு எதிரிகள் யார் யாரை குறிப்பிட வேண்டும் என உயர் அதிகாரியின் உத்தரவிற்கு ஏற்ப செயல்பட்டதால் தான் காலத்தாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அன்று விடியற்காலை 04.00 மணி வரை சம்பவயிடத்திற்கு ஆம்புலன்சோ, தீயணைப்பு துறை வாகனமோ வந்ததாக எனது விசாரணையில் தெரியவில்லை ஆய்வாளர் தான் விசாரணை செய்தார். ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. (அனைத்து எதிரிகளுக்காகவும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என எதிரிகள் தரப்பில் கூறப்பட்டது).

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 24.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 18:40:20 +0600

Additional District Judge(FTC),
Vellore